OP. No. 23/2021

Dated : 06.10.2023

Time:  11.50 a.m to 12.10  p.m

P.W- 2 சாட்சி  சத்தியபிரமாணம் செய்யப்பட்டு திரும்ப அழைக்கப்பட்டு 4 முதல் 7 பிரதிவாதிகள் சார்பாக  குறுக்கு விசாரணை தொடர்ச்சி

குறுக்கு விசாரணை

1) நான் 4 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன்.  எனக்கு எழுத படிக்க தெரியாது. நிச்சியத்தின் போது 3 பவுன் நெக்லஸ் நாங்கள் எதிர்மனுதாரருக்கு கொடுத்தோம். அதே போல் 6 பவுன் தாலி கொடுத்தோம். மாப்பிள்ளைக்கு எதிர்மனுதாரர் தரப்பில் 3/4 பவுன் மோதிரமும், 1-1/2 பவுன் செயினும் அணிவித்தார்கள்  என்றால் 1/2 பவுன் மோதிரம் மற்றும் 1 பவுன் செயின் செய்தார்கள். நான் இம்மனுவிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேலும் நாங்கள் ரூ.10,00,000/- செலவு செய்ததாக பொய் சொல்கிறோம் என்றால் அது தவறு. எதிர்மனுதராரர் தகப்பனார் மரசெக்கு தொழில் தினக்கூலியாக செய்து  வருகிறார்.

2) மேற்படி எதிர்மனுதாரரின் தகப்பனார் திருமண செலவை நாங்களே ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டதால் அதை நாங்க்ள ஏற்றுக்கொண்டோம் என்றால் சரியல்ல.  கவுரவக்குறைச்சல் இருக்கும் என்பதால் பாதி செலவு செய்கிறோம் என்று எதிர்மனுதாரர்கள்  சொன்னார்கள். எதிர்மனுதாரரின் சகோதரரர் மது அருந்துவார் என  இம்மனுவிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.  எங்கள் கவுண்டர் ஜாதியில் பெட்டி சீர் என கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான். எதிர்மனுதாரரின் தகப்பனார் என் மகனுக்கு பெட்டி சீராக ரூ.5000/- கொடுத்தார் என்றால் கொடுத்தார் ஆனால் அவரே வாங்கிக்கொண்டார்.

3) திருமணத்திற்கு என் மருமகள் கோயம்முத்தூரில் பணியில் இருந்தார். அதன் பிறகு ராஜினமா செய்துவிட்டார்.  என் மகன் சென்னையில் பஜாஜ் பைனான்சில் வேலை செய்கிறார்.  மேற்படி நானும், என் மகன், மகள், கணவர் அணைவரும் சேர்ந்து எதிர்மனுதாரரை வரதட்சணை கேட்டு கொடுமை செய்தோம் என்றால் அது தவறு. ஆனால் அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால்

சரிதான். மேற்படி எதிர்மனுதாரரை என் மகன் தினமும் குடித்துவிட்டு வந்து 30 பவுன் நகை மற்றும் ரூ.500000/- பணமும் கொண்டு வரசொல்லி அடித்து கொடுமைபடுத்தினார் என்று அதற்கு நான் துணையாக இருந்தேன் என்றும் சொன்னால் தவறு.

4) மேற்படி மனுதாரர் கேட்டுக்கொண்டதால்தான் எதிர்மனுதாரரின் சகோதரர் சென்னையில் அவருடன் தங்கினார் என்றும் எனக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் அவரும் அங்கு காலி செய்துவிட்டார் என்றால் சரியல்ல. மேற்படி என் கணவர் எதிர்மனுதாரரிடம் தவறாக நடக்க முயற்சித்து அதை அவர் மனுதாரரிடம் சொல்லி குடும்பத்தில் பிரச்சணை ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேலும்அ ந்த பிரச்சணையில் எதிர்மனுதாரர் செல்லை என் மகன் உடைத்து விட்டு எல்லா நகைகளையும் பிடுங்கிக்கொண்டு வீட்டை விட்டு வெளியே துரத்திவிட்டார் என்றால் அது தவறு.

5) எதிர்மனுதாரர் உயிருக்கு பயந்து அவருடைய பெற்றோர் வீட்டிற்கு சென்று விட்டார் என்றால் அது தவறு. எங்களுடைய கொடுமையால் எதிர்மனுதாரரின் தகப்பனாருக்கு உடல் நிலை பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையாக இருக்கிறார் என்றால் அது தவறு. மேலும் என் மகனுக்கு வேறு திருமணம் செய்யும் நோக்கில் எதிர்மனுதாரரை வீட்டை விட்டு துரத்திவிட்டோம் என்றால் அது தவறு. தற்போது மனுதாரர் சென்னையில் திருவான்மையூர் கண்ணப்பன் நகரில் 1 வது குறுக்கு தெரு 2 வது மாடியில் கதவு எண்52 ல் குடியிருக்கிறார் என்றால் சரிதான்.

6) நாங்கள் பெரம்பலூர் மாவட்டம் மலையாளப்பட்டியில் கதவு எண். 238 கவுண்டம்பாளையத்தில் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். எங்கள் மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

Sd/- K.Ananthan,
Subordinate Judge,
Attur.